# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24.09.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

பல்வேறு நாடுகளில் கிளை அமைப்புகளின் இஜ்திமா நடைபெறும் மாதங்களாக செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் திகழ்கின்றன. இன்ஷா அல்லாஹ் இன்று குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா துவங்குகிறது. இதே போன்று அடுத்து ஜுமுஆவில் அன்ஸார் மற்றும் லஜ்னாவின் இஜ்திமா நடைபெறவிருக்கின்றன. கடந்த 27, 28 வருடகாலமாக U.K இஜ்திமாவில் காலத்தின் இமாம் கலந்து கொள்வது இஜ்திமாவின் ஒரு அங்கமாக அமைந்து விட்டது.

காலத்தின் இமாம், ரப்வா – பாகிஸ்தானில் இருந்தபொழுது ஹிஜ்ரத்திற்கு முன்பு அனைத்து கிளை அமைப்புகளின் இஜ்திமாவிலும் கலந்து கொண்டார்கள். அந்த இஜ்திமாவில் பாகிஸ்தானிலிருந்தும் அனைத்து இடங்களிலிருந்தும் கிளை அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இதன் மூலமாக ரப்வாவின் பிரகாசம் மேலும் பன்மடங்காக பிரகாசித்தது. குறிப்பாக அவ்வேளையல் குத்தாம் மற்றும் அத்ஃபால்களுக்கு ஒரு தனிப்பட்ட ஈர்ப்பு இருந்தது. மேலும் இஜ்திமா ஓர் அழகான காட்சியை வெளிப்படுத்தியது. கூடாரத்தில் தங்கி வந்தார்கள். அனைத்து மஜ்லிஸ்களும் தத்தமது போர்வையினை எடுத்து வந்து தற்காலிகமான கூடாரத்தை அமைத்து வந்தார்கள். அப்போது இங்கிருப்பது போன்று கூடாரம் கிடைப்பதில்லை. மாறாக போர்வையின் மூலமாகத்தான் கூடாரம் அமைத்து வந்தார்கள். அதிலேயே தங்கியும் இருந்தார்கள். கூடாரத்தில் தங்கக்கூடிய அனைத்து மஜ்லிஸின் குழுக்களும் தத்தமது போர்வைகளை எடுத்து வந்து மிகவும் அழகான வண்ணமயமான கூடாரத்தை அமைத்து வந்தார்கள். அக்டோபர் மாதத்தின் போது பாகிஸ்தானின் சீதோஷ்ண நிலை பொதுவாக நன்றாக இருக்கும். மழை பெய்யாது. இதனால் எவ்வித கஷ்டத்தையும் உணர முடியாது. இங்குள்ள சீதோஷ்ண நிலை அங்கிருந்தால் அநேகமாக கஷ்டத்தினை உணர வேண்டியது வரும். எவ்வாறிருந்த போதிலும் U.K.வின் குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமா எனக்கு எனது சிறு வயதின் போது நான் கலந்து கொண்ட இஜ்திமாவை நினைவுபடுத்துகின்றது. இத்துடன் கொடுமையாளர்களின் கொடூர ஆட்சியினால் அநீதியிழைக்கப்பட்டவர்கள் இவ்வாறான தனது உரிமைகளை பறிக்கப்பட்டவர்களாக ஆனார்கள். அதாவது தமது சீர்திருத்தம், தர்பிய்யத் அல்லாஹ் மற்றும் அவனது ரஸுலை நினைவு கூர்வதற்காக ஒன்றுகூடி இவ்வாறான இஜ்திமாவை நடத்துவதிலிருந்து தடுக்கப்பட்டு வருகின்றார்கள். எவ்வாறிருந்த போதிலும் நானும் நீங்களும் இவ்வாறான நிலைமையில் நிலைத்திருக்கப் போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றோம். ஒருநாள் இந்த கொடுமைகளும், கொடுமை செய்பவர்களும் இப்பூமியிலிருந்து அழிக்கப்படுவார்கள். அல்லாஹ் பொறுமை மற்றும் துஆவுடன் செயல்படுவதற்கான நல்வாய்ப்பினை தந்தருள்வானாக! ஆமீன். இவ்விஷயத்தினை நான் பொதுவாக இஜ்திமாவின் போது கூறியிருக்க வேண்டும். மேலும் அனைத்து வருடமும் இஜ்திமாவின் போது அதன் கிளை அமைப்புகள், இஜ்திமா சம்பந்தப்பட்ட ஒரு விஷயங்களை கூறுவேன். எனக்கு இன்று இந்த ஜுமுஆவிலேயே இது சம்பந்தமான விஷயங்களைக் கூறிவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

ஏனென்றால் ஒன்று, பாகிஸ்தானில் நடைபெறும் இஜ்திமாவின் தொடக்கவுரை, இறுதி உரையை காலத்தின் இமாம் ஆற்றினார்கள். இரண்டாவது, இஜ்திமாவின் போது பொதுவாக எனது உரை இறுதியாக இருக்கும். அது M.T.A. மூலமாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படாது. மாறாக ஒரு சில நாட்களுக்குப் பிறகு அல்லது 10 நாட்களுக்குப் பிறகு ஒளிபரப்பாகும். மேலும் இதனை பலரும் கேட்க முடியாத சூழ்நிலை ஏற்படக்கூடும். மூன்றாவது, எங்கெல்லாம் இஜ்திமா நடைபெறுகின்றதோ அவர்கள் இந்த குத்பாவினை தனக்கான ஒரு தூதுச் செய்தியாக எடுத்துக் கொண்டு அதன்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். மேலும் குறிப்பாக தத்தமது துஆவில் பாகிஸ்தானில் வசிக்கும் அஹ்மதிகளையும் நினைவில் கொள்ளுங்கள்.

நான்காவது, எங்கெல்லாம் புதிய ஜமாஅத் மற்றும் புதிய கிளை அமைப்புகள் உருவாகின்றதோ அங்குள்ள அனைவரும் தத்தமது பொறுப்புகளை உணர்ந்தவாறு இந்த குத்பாவின் மூலம் பயனடைவதற்கு முயற்சி செய்யுங்கள். எவ்வாறிருந்தபோதிலும் இஜ்திமாவினை முன் வைத்து குறிப்பாக குத்தாம்களுக்கும் பொதுவாக அனைத்து அஹ்மதிகளுக்கும் நான் ஒரு சில விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன்.

திருக்குர்ஆனில் மார்க்கத் தொண்டு, சீர்திருத்தம் மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுதல் சம்பந்தமாக குத்தாம்களைக் குறிப்பிட்டு இரண்டு இடங்களில் வந்துள்ளது. இவ்வாறான இளைஞர்கள் மஸீஹே முஸ்வி (மூஸாவின் சமுதாயத்திற்கு வந்த மஸீஹ்) –ஐப் பின்பற்றும் இளைஞர்களாக இருந்து வந்தனர். இவர்கள் சுமார் 300 வருட காலமாக கொடுமைகளை சகித்து வந்தார்கள். அவர்கள் மிக நீண்ட காலமாக குகையில் மறைந்து வாழும் அளவுக்கு அவர்கள் மீது கொடுமையிழைக்கப்பட்டது. குகையிலும் கூட அப்போதைய ஆட்சி அதிகாரிகள் அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டே வந்தார்கள். ஆனால் மார்க்கம் மற்றும் ஏகத்துவத்திற்காக அவர்கள் கொடுமையினை சகித்து வந்தார்கள். நிலைமைகள் சிறிது சரியாகி விட்டது என தெரிந்ததும் வெளியே வந்து சென்றார்கள். ஆனால் கொடுமையினை அவர்கள் ஒவ்வொருநாளும் அனுபவித்துதான் வந்தார்கள். எவ்வாறிருந்தபோதிலும், தவ்ஹீதை நிலைநாட்டுதல் மற்றும் மார்க்கத்தின் பாதுகாப்பிற்காக அவர்களின் செயல் எந்த அளவுக்கு தகுதிவாய்ந்ததாக இருந்தது என்றால், அதனை இறைவன் திருக்குர்ஆனில் பாதுகாத்து விட்டான். இது சம்பந்தமாக ஓரிரு வசனங்களை உங்கள் முன் வைக்கின்றேன். அதில் இறைவன் கூறுகின்றான்:

**அந்த இளைஞர்கள் விசாலமான குகையினுள் அடைக்கலம் புகுந்த போது, எங்கள் இறைவா! நீ எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக! மேலும் எங்களின் இவ்விஷயத்தில் நேர்வழியை எளிதாக்கித் தருவாயாக என்று வேண்டினர். (18:11)**

**(இப்பொழுது) நாம் அவர்கள் பற்றிய மிக முக்கியமான செய்தியினை மிகச் சரியாக உமக்கு விளக்குகின்றோம். அவர்கள் தங்கள் இறைவன் மீது (உண்மையான) நம்பிக்கை கொண்ட சில வாலிபர்களாக இருந்தனர். அவர்களை நாம் நேர்வழியில் (மேன்மேலும்) முன்னேறச் செய்தோம். (18:14)**

**அவர்கள் (ஊரை விட்டு வெளியேற) எழுந்தபோது, அவர்களின் உள்ளங்களை நாம் உறுதிப்படுத்தினோம். அவர்கள் (தங்களுக்குள்) வானங்களுக்கும் பூமிக்கும் உரிய இறைவனே எங்கள் இறைவன் ஆவான்; அவனையன்றி வேறு கடவுளை நாங்கள் ஒருபோதும் அழைக்கமாட்டோம்; அவ்வாறு செய்தால், உண்மைக்குப் புறம்பானதைக் கூறியவர்களாவோம் எனறு கூறினர். (18:15)**

ஆக, தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக இவர்கள் முயற்சி செய்தார்கள். கொடுமையை சகித்துக் கொண்டு இறைவனிடம் துஆ செய்து வந்தார்கள்.

அதாவது அல்லாஹ் தனது ரஹ்மத்தினால் ஏகத்துவத்தில் நிலைத்திருக்கச் செய்வானாக! மேலும் நேர்வழியில் சென்று கொண்டிருப்போமாக! இதற்கு முன்னுள்ள வசனங்களில் இவ்வாறு வருகின்றது. அதாவது இன்றைய கால கிறித்தவர்கள் ஏகத்துவத்தை விட்டு விட்டு இறைவனுக்கு மகனை உருவாக்கி வைத்துள்ளார்கள். இது முற்றிலுமாக பொய்யான கண்ணோட்டமும், பொய்யான போதனையும் ஆகும். இவர்களின் இப்போதனைகளுக்கும் உண்மையான கிறித்தவர்களின் போதனைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இது எப்படிப்பட்ட அபாயகரமான விஷயம் என்றால், நிச்சயமாக இது இவர்களது தண்டனைக்கு காரணமாய் அமையும். கிறித்தவர்கள் எந்த உண்மையான போதனைகளுக்காக தியாகத்தை மேற்கண்டார்களோ அது முக்கடவுள் கொள்கையாக இருந்ததில்லை. மாறாக, ஏகத்துவத்தின் போதனையாக இருந்தது. இறைவன் அவர்களின் பல்வேறு தரப்பட்ட காலத்தினைப் பற்றி கூறிய பிறகு இவ்வாறு கூறுகின்றான்: அவர்கள் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையினால் நாம் அவர்களை நேர்வழியில் நிலைத்திருக்கச் செய்தோம். மேலும், அவர்களது உள்ளங்களை வலுவாக்கினோம். மேலும் அவர்கள் ஓர் இறைவனை வணங்குவதன் பக்கம் அழைப்பு விடுத்து வந்தார்கள். அவனையே வணங்கியும் வந்தார்கள்.

அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை என்ற விஷயத்தில் மிகவும் பகிரங்கமாக விழிப்புணர்வூட்டி வந்தார்கள். ஆனால் பிறகு காலம் செல்லச் செல்ல பல்வேறு காரணங்களினாலும், ஆட்சி அதிகாரத்தின் விளைவுகளாலும் கிறித்தவர்களின் கொள்கையில் மெல்ல மெல்ல முக்கடவுள் கொள்கையானது இடம்பிடித்து விட்டது. இதேபோன்று தீயவர்களின் தீய கண்ணோட்டத்தின் காரணங்களினாலும் கிறிஸ்தவர்களின் கொள்கையில் இவ்வாறான கண்ணோட்டம் உருவெடுத்தது. மேலும் உலக மொழிகள் அவர்களின் மார்க்கத்தில் இடம்பிடித்து விட்டது. இவ்வாறான இணை வைப்பவர்களை நோக்கி இறைவன் தீயில் இடுவதாக எச்சரித்துள்ளான். எவ்வாறிருந்தபோதிலும் இவ்வசனத்தைக் கூறுவதன் நோக்கம் என்னவென்றால், கிறித்தவர்கள் எப்போது தனது உண்மையான கொள்கையில் நிலைத்திருந்தார்களோ அப்போது அதனைப் பாதுகாப்பவர்களாக இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் ஈமானைப் பாதுகாத்து வந்தார்கள். மேலும் இறைவன் அவர்களின் நம்பிக்கையினால், கொடுமையிழைக்கக்கூடிய ஆட்சி அதிகாரத்தின் முன் தனது மார்க்கத்தினைப் பாதுகாத்ததன் காரணத்தால், அல்லாஹ் ஒருவன் மட்டுமே உண்மையான வணக்கத்திற்குரியவன் என்பதை ஏற்றுக் கொண்டதன் காரணத்தால், அவர்களை (அல்லாஹ்) நேர்வழி பெற்றவர்களாக ஆக்கினான். அவர்கள் எவ்வித உலக ஆதாயங்களுக்காகவும் கவலைப்பட்டதில்லை. மாறாக இறை திருப்தியை முன்வைத்தே செயல்பட்டார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: அந்த இளைஞர்களின் நம்பிக்கையினால் அவர்களுடன் நாம் எவ்வாறு நடந்து கொண்டோம் என்றால், ‘‘நாம் அவர்களுக்கு நேர்வழியில் முன்னேற்றத்தினை வழங்கினோம்... நாம் அவர்களின் உள்ளங்களுக்கு வலிமையினை வழங்கினோம்.....’’

நேர்வழியில் முன்னேற்றம், உள்ளத்தின் வலிமையின் காரணமாக அவர்கள் தனது காலத்தின் கொடூர ஆட்சி அதிகாரத்தின் முன், நாங்கள் நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வேறொருவரை வணக்கத்திற்குரியவன் என்று அழைக்கமாட்டோம். நாங்கள் எங்களது உயிரைத் தியாகம் செய்வோம்; எங்களது உரிமையினை தியாகம் செய்வோம். நாங்கள் எங்களது நேசர்கள் மற்றும் பொருள்களை தியாகம் செய்வோம். ஆனால் ஏகத்துவத்தை விட்டு நாங்கள் எப்பொழுதும் பின்வாங்க மாட்டோம். ஆக இது நம்முன்னால் இருக்கும் அந்த நம்பிக்கையாளர்களின் ஒரு முன்மாதிரியாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களின் மூலம் நம்முன் வைத்த நல்ல முன்மாதிரிகள் அவர்கள் முன் இருந்ததில்லை. ஆக இந்த முன்மாதிரியானது நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால் நாம் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக நமது உறுதிமொழியினை நிறைவேற்றியவாறு உயிர், பொருள், நேரத்தினை தியாகம் செய்து கொண்டே செல்ல வேண்டும். எவ்வித சோதனையும், எவ்வித உலகப் பேராசைகளும் நமது தியாக உணர்வினை தடுத்து விடக்கூடாது. இறை ஜமாஅத்தானது பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகி வருவதை நாம் பார்த்து வருகிறோம். இவ்வகையில் உடனே நமது கவனம் பாகிஸ்தான் அஹ்மதியின் பக்கம் செல்கின்றது. மற்ற நாடுகளிலும் அஹ்மதிகளுக்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றது. இவ்வாறான அஹ்மதிகள் உடல் மற்றும் உள்ளத்தால் கொடுமைகளை சகித்துக் கொண்டு உயிர், பொருள்களைத் தியாகம் செய்கின்றார்கள்.

இவ்வாறு அரபு நாடுகளிலும் அஹ்மதிகள் இருக்கின்றார்கள். இவர்களின் எண்ணிக்கையும் இறை அருளால் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இறை அருளால் தினமும் வரக்கூடிய கடிதத்தில் பைஅத் கடிதமும் வருகின்றது. இந்த அரபு நாடுகளிலும் அஹ்மதியாக மாறியதன் காரணமாக பல்வேறு கஷ்டங்கள் இருந்து வருகின்றன. இந்த நாடுகளில் வாழும் அஹ்மதிகளும், குகைவாசிகளின் வாழ்க்கையினை வாழ்ந்து வருகின்றார்கள். பாகிஸ்தானோ ஒரு பழைமையான ஜமாஅத் ஆக இருக்கிறது. எவ்வித அச்சமுமின்றி தமது ஈமானை அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள். எந்தவொரு அஹ்மதிகளிடம் அஹ்மதிய்யத் மறைந்திருப்பதில்லை; எவ்வகையிலும் தெரிந்து விடும். ஆனால் புதிதாக சேரக்கூடியவர்களுக்கு இது மிக கஷ்டத்திற்குரியதாக ஆகி விடுகின்றது. புதிதாக இணைபவர்களில் அதிகபட்சமானவர்களிடம் உணர்வுகளும் இருக்கின்றன. ஈமானில் முன்னேறுபவர்களும் இருக்கின்றனர். இருந்தபோதிலும் சிலர் பலவீனமானவர்களாகவும் இருக்கின்றனர். பிறகு ஜமாஅத்தில் அவர்களின் உறுதிப்பாட்டிற்கு சில நேரங்களில் இது அவசியமாகவும் இருக்கின்றது. அதாவது அதிக அளவில் ஓரிடத்தில் சேருவதும் ஜமாஅத்துடன்

தொழுவதிலிருந்தும் அல்லது ஜுமுஆ தொழுவதிலிருந்தும் தடுக்கப்படுகின்றனர். அஹ்மதிகளின் பாதுகாப்பிற்காக ஒரு சில ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றது. சில வேளையில் மிகவும் வேதனையுடன் அரபு நாடுகளிலிருந்து நாங்கள் எதுவரை இவ்வாறு வாழ்ந்து வருவோம் என்று எனக்கு கடிதம் எழுதி வருகின்றனர். பின்பு நான் எப்போதும் அவர்களுக்கு குகைவாசிகளின் உதாரணத்தை எடுத்துக்கூறி பொறுமையினை மேற்கொள்ளும்படி கூறி வருவேன். இந்த நாள் இன்ஷா அல்லாஹ் மாறும். நபிமார்களின் வரலாற்றில் இவ்வாறான நாட்கள் மாறிக்கொண்டிருக்கின்றன. இன்ஷா அல்லாஹ் மாறும் என்பதை (வரலாறு) எடுத்துரைத்துக் கொண்டு வருகின்றது.

நான் கூறியது போன்று ஜுமுஆவினைக் கூட இவர்கள் மறைந்திருந்து தொழுது வருகின்றார்கள். இவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், கிலாஃபத்தின் கீழ் இருந்தவாறு நேரடியாக இஜ்திமா மற்றும் ஜல்ஸாவின் அருள்களை பெற்றுக் கொண்டிருக்கும் பாகிஸ்தானிகளின் உணர்வுகளை இன்னும் நீங்கள் உணரவில்லை. இவ்வாறு இருந்தும் கூட கடந்த 28 வருடகாலமாக தமது ஈமானை பாதுகாப்பதற்காக இந்த முஹம்மதிய மஸீஹின் அடிமைகள் பல்வேறு வகையான தியாகங்களை செய்து கொண்டு செல்கின்றனர். இத்தனை வருடகால முடக்கம் மற்றும் துன்புறுத்தல் என்பது சாதாரண விஷயமல்ல. ஆனால் பொறுமையை மேற்கொண்டவாறு ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், பெரியவர்கள் இத்தியாகத்தை செய்து கொண்டே செல்கின்றனர்.

ஆனால் இது எப்பொழுதும் இருக்கக்கூடிய தியாகமில்லை. இது 300 வருடத்திற்கும் மேலாக இருக்கக்கூடிய தியாகம் அல்ல. இத்தியாகங்கள் இறை அருளால் மிக வேகமாக வெற்றி மற்றும் முன்னேற்றத்தின் அருகாமையை நோக்கி நம்மை அழைத்துக் கொண்டு செல்கிறது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தோன்றியதன் குறிக்கோளின் முயற்சிகள் ஒரு சில நாடுகளின் கொடூரத்தால் நின்றுவிடாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தி மற்றும் ஏகத்துவத்தினை உலகத்தின் எல்லை வரை எட்ட வைக்கும் பொறுப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் இருக்கின்றது. இந்த எதிர்ப்புகள், எதிரிகளின் நிபந்தனைகளால் இவ்வேலை முடிந்து விடவில்லை. ஜமாஅத்தே அஹ்மதிய்யா ஒவ்வொரு நாளும் தனது வெற்றியின் விடியலை பல விதங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறது. கடந்த நாட்களில் அயர்லாந்தில் மஸ்ஜிதின் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த நாளும் ஐரோப்பாவில் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் எவ்வளவு இருக்கிறதென்றால் இங்கு கிறிஸ்தவர்களுடன் உள்ள தொடர்பு அதிகமாக இருக்கின்றது. இங்கு அதிகமானோர் கத்தோலிக்கர்களாக இருக்கின்றனர். சர்ச்சிற்கு வருவது மற்றும் அதனை சார்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. இது தவிர ஐரோப்பாவின் அதிகமான கிறிஸ்தவர்கள் மதத்தின் தொடர்பு துண்டித்தவர்களாக உள்ளனர். எவ்வாறிருந்த போதிலும் இந்த நாடு, கடந்த குத்பாவில் விரிவாக நான் குறிப்பிட்டது போன்று உலகத்தில் எல்லையில் இருக்கின்றது. இங்கு பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டுதல், Reception ஒரு ஹோட்டலில் நடந்தது. இதில் சுமார் 100 பேர் படித்தவர்களாக இருந்தனர். M.P. -யும் கலந்து கொண்டார்கள். அரசு அதிகாரிகளும் இருந்தனர். Professor மற்றும் ஆசிரியர்களும் இருந்தனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டனர். அங்கு காட்வே நகரத்தின் மேயரும் கலந்து கொண்டார்கள். அங்குள்ள பெரிய பாதிரிமார்களும் இருந்தனர். இவர்கள் அனைவருக்கும் இஸ்லாத்தின் உன்னதமான போதனைகளையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் தூதுச் செய்தியினையும் கூறும் வாய்ப்பு கிடைத்தது. இதனை National TV மற்றும் பத்திரிகையாளர்கள் மிகவும் சிறந்த முறையில் செய்தியினை வெளியிட்டார்கள். இதன் மூலம் இஸ்லாத்தின் உன்னதமான போதனை பல இலட்ச மக்கள் வரை சென்றடைந்தது.

ஒரு பக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத்தினை முடக்கி விட முயற்சி செய்தாலும், இன்னொரு பக்கம் இறைவன் தப்லீகிற்கான வழியினை திறந்து தருகின்றான். அயர்லாந்து எண்ணிக்கையின் அடிப்படையில் சிறிய ஜமாஅத்தாக இருக்கின்றது. இதில் அதிகமானோர் இளைஞர்களாக இருக்கின்றனர். அல்லாஹ்வின் அருளால் நல்ல Active ஆன ஜமாஅத்தாக இருக்கின்றது. பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டியதில் அவர்களின் தொடர்பும் மிகச் சிறந்ததாக இருக்கின்றது. மேலும் இந்த Function மூலம் இவர்களது தொடர்பு

இன்னும் அதிகமாகும். இன்னும் புது வழி இவர்களுக்காக உருவாகும் இன்ஷா அல்லாஹ். இந்த உணர்ச்சியினை நிலை நாட்டியவாறு உருவாகி விட்ட இவர்களின் தொடர்புகளை இன்னும் அதிகப்படுத்தினால் சிறியதாக இருக்கும் மஸீஹே முஹம்மதின் இக்கூட்டமானது ஏகத்துவத்தை விட்டு விலகியிருக்கும் மஸீஹே முஸ்வியின் கூட்டத்தினரை ஒரு நாள் ஓர் இறைவன் முன் குனியக்கூடியவர்களாக ஆக்கி விடுவார்கள் இன்ஷா அல்லாஹ். ஆக, ஒரு பக்கம் கவலைக்குள்ளாக்கினாலும் மறுபக்கம் நானும் எனது தூதரும் நிச்சயமாக வெற்றி பெற்றே தீருவோம் என்ற வசனம் திருப்தி அளிக்கின்றது. மஸீயே முஸ்வியின் குகைவாசிகளின் காலத்திற்குப் பிறகு உலகத்தில் பரவிய கிறிஸ்தவர்ள் இணைவைத்தலுக்கு ஆளாகினார்கள். ஆனால் மஸீஹே முஹம்மதினை ஏற்பவர்களுக்கு 300 வருடகாலம் ஆவதற்கு முன்பே இன்ஷா அல்லாஹ் வெற்றி கிடைக்கும். இவ்வாறான வெற்றியும் இணைவைத்தலை வேரோடு பிடுங்கி ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கு காரணமாக அமையும். எங்களுக்கு எந்தவித உருக்கமும் இல்லை. இன்று அல்லாஹ்வின் அருளால் உலகத்தில் அஹ்மதிய்யத் மிகவும் வளர்ச்சி அடைந்து விட்டது.

ஒரு சில நாடுகளில் அஹ்மதிய்யத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டாலும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் பல்வேறு தீவுகளில் அஹ்மதிகள் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளின்படி நடப்பதற்காகவும் அதனை தனது வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்வதற்காகவும் பல்வேறு வழிகள் திறந்திருக்கின்றன. தப்லீக் மைதானமும் திறந்திருக்கின்றன. இவ்வாறான நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் அஹ்மதிகளுக்கு நான் கூறிக் கொள்வது என்னவென்றால், இவ்வாறான வசதி மற்றும் சுதந்திரத்தினை தமது குறிக்கோளை அடைவதற்கு காரணமாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் வஸித்னாஹும் ஹுதா என்னும் வார்த்தையை குகைவாசிகளுக்காக மட்டும் கூறவில்லை. மாறாக அவன் இதன் மூலம் ஒரு வழிமுறையினைக் கற்றுத் தந்திருக்கின்றான். அதாவது எவர் ஒருவர் தனது ஈமானைப் பாதுகாக்கின்றாரோ மார்க்கத்தில் நிலைத்திருக்க முயற்சிக்கின்றாரோ அவர்களை நேர்வழியில் முன்னேற்றம் அடையச் செய்து கொண்டே செல்வான். அவர்களின் ஈமானும் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்லும்.

இவ்விஷயத்தை இறைவன் சூரா அன்ஃபாலில் இவ்வாறு கூறுகின்றான்:

**(தங்கள் முன்) அல்லாஹ் (வின் பெயர்) நினைவு கூறப்படும்போது, உள்ளங்கள் நடுங்குபவர்களே (உண்மையான) நம்பிக்கை கொண்டவர்களாவர். அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதப்படும் போது அவை அவர்களின் நம்பிக்கையினை வளரச் செய்கிறது. (மேலும்) அவர்கள் தங்கள் இறைவனிடமே நம்பிக்கை வைப்பார்கள். (8:3)**

**அவர்கள் தொழுகையை (முறைப்படி) நிலைநாட்டுவர். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றில் இருந்து செலவு செய்வர். (8:4)**

**உண்மையான நம்பிக்கையாளர்கள் அவர்களே. அவர்களுக்கு அவர்களின் இறைவனிடம் (உயர்) பதவிகளும் மன்னிப்பும், கண்ணியமான உணவும் உள்ளன. (8:5)**

அல்லாஹ் இந்த வசனத்தில் ஈமானின் வாதம் செய்யக்கூடிய ஓர் உண்மையான முஃமினுக்கான அடையாளத்தை கூறியிருக்கின்றான். வெறும் வாயினால் வாதம் செய்வதால் உண்மையான முஃமினாக ஆகிவிட முடியாது. அதற்கென சில விதிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் சோதனைகளிலும் தமது ஈமானைப் பாதுகாப்பார்கள். மேலும் கஷ்டநிலைகளிலும் தமது ஈமானைப் பாதுகாப்பார்கள். இவ்வாறு நடக்கும் போதுதான் உண்மையான முஃமின்கள் இறைவனால் அளிக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளுக்கு வாரிசாக முடியும். ஒரு மனிதன் நான் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டிருக்கின்றேன் என்று வாதம் செய்வதில் உண்மையாளராக இருந்தால் அவருடைய சொல்லும் செயலும் இறை திருப்தியைப் பெறுவதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் பெயர் வெறும் வாயளவில் இருந்துவிடக் கூடாது. மாறாக உள்ளத்தில் ஓர் அச்சம் இருக்க வேண்டும்.

**இறைவன் கூறுகின்றான்:**

**(தங்கள் முன்) அல்லாஹ் (வின் பெயர்) நினைவு கூறப்படும்போது, உள்ளங்கள் நடுங்குபவர்களே (உண்மையான) நம்பிக்கை கொண்டவர்களாவர்.(8:3)**

மேலும் அல்லாஹ்வின் திருப்தி அவர்களிடம் இருந்து கொண்டேயிருக்கும்; இருக்கவும் வேண்டும். அவனின் திருப்தியை பெறுவது எவ்வாறு? அது அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்தால் மட்டுமே பெற முடியும். ஈமான் என்றால் வெறும் வாயால் வாதம் செய்வது என்று பொருளல்ல. மாறாக இது தொடர்ந்து நிலைத்திருக்கும் ஓர் விஷயமாகும். மேலும் அடையாளங்கள் அவர்களின் ஈமானை அதிகரிக்கச் செய்கின்றன என்பதும் அவர்களுக்கான அடையாளமாகும். இந்த விஷயம் கஷ்டமாக இருக்கின்றது. இந்த செயல் கஷ்டமாக இருக்கிறது என்ற சாக்குப்போக்குகளை கூறி தட்டிக் கழிக்கமாட்டார்கள். மாறாக இறைவனின் அனைத்து கட்டளைகளின் தூதுச் செய்தியைக் கேட்டு அதன்படி நடப்பதே ஓர் உண்மையான முஃமினீன் அடையாளமாகும். இவ்விஷயத்தினை இறைவன் இன்னோரிடத்தில் இவ்வாறும் கூறுகின்றான்:

இறைவனின் வசனங்கள் நினைவூட்டப்படும் போது செவிடர்களைப் போன்றும், குருடர்களைப் போன்றும் அலட்சியமாக இருக்கமாட்டார்கள். (25:74)

ஆக, இறைவனின் அனைத்துக் கட்டளைகளின்படி நடக்காமல் நான் ஏகத்துவத்தில் நிலைத்திருக்கிறேன் என்று வெறும் வாயால் மட்டும் வாதம் செய்வது ஈமானில் அபிவிருத்தி அடைவதற்கு காரணமாக அமையாது. இறைதிருப்தியை அடைவதற்காக மனிதன் தனது நஃப்ஸை குர்பான் செய்தால்தான் உண்மையான ஏகத்துவத்தை நிலைநாட்ட முடியும். அதே வேளையில் இறைவனின் மீதும் முழுமையான நம்பிக்கையும் இருக்கும். மேலும் இறைவன் கூறுகின்றான்: தொழுகையை நிலைநாட்டுவதில் ஓர் உண்மையான முஃமினின் அடையாளமாக இருக்கின்றது. நான் இப்பொழுது ஓதிய வசனத்தில் இறைவன் இதையே குறிப்பிடுகின்றான். இஜ்திமாவிலும், இதற்குப் பிறகும் கூட அனைத்து குத்தாம்களுக்கும் இதன்பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும். குறிப்பாக இஜ்திமாவில் ஜமாஅத் தொழுகைக்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இதன் பிறகும் கூட தொழுகையை ஜமாஅத்தாக தொழுவது, நேரத்தின்படி தொழுவது இது மிகவும் அவசியமாகும். இவ்வாறு டியூட்டியில் இருக்கும் குத்தாம்களும் மற்றும் இதில் கலந்திருப்பவர்களும் தொழுகையினை தொடர்ந்து நிறைவேற்றுங்கள். டியூட்டியின் காரணத்தினால் தொழுகையை விட்டு விடாதீர்கள். பிறகு நான் கூறியது போன்று இஜ்திமாவில் மட்டுமல்ல, மற்ற நாட்களிலும் இதனை தொடர்ந்து பேண வேண்டும். இஸ்லாத்தின் வெற்றி துஆவுடன் தான் இருக்கின்றது. இதன் பக்கம் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். தொழுகையை நிலைநாட்டுவதே துஆவிற்கான வழியாக இருக்கின்றது. அதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும். ஏகத்துவத்தை நிலைநாட்டுவதும் இறைவனை உண்மையான நேசனாக கருதுவது ஓர் முஸ்லிமின் குறிக்கோளாகும். மேலும் இந்த குறிக்கோளானது தொழுகையை நிலைநாட்டாமல் நிறைவேறாது. ஐந்து நேரத் தொழுகைதான் ஓர் முஃமினின் உள்ளத்திலுள்ள சிலையை உடைப்பதற்கு காரணமாக அமைகின்றன. பிரத்யேகமாக இவ்வுலகிலும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கு இந்த ஐந்து நேரத் தொழுகையே காரணமாக அமைகின்றன. நமது உள்ளத்திலுள்ள சிலைகளும் உடைக்கின்றன. அத்துடன் வெளிப்படையான சிலையையும் உடைக்கின்றன. ஆக ஏகத்துவத்தை நிலைநாட்டுவது மற்றும் பரப்புவதற்காக இது ஓர் அடித்தள விஷயமாக இருக்கின்றன. இதனை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் கூறுகின்றான்: நாம் வழங்கியவற்றிலிருந்து செலவு செய்கின்றார்கள். மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும், ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காகவும் செலவு செய்பவர்களையும் அல்லாஹ் ஈமானில் அதிகரிக்கச் செய்கின்றான். ஆக இக்கட்டளையின் கீழ் இருந்தவாறே ஜமாஅத்திலும் பொருள் தியாகத்திற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பிறகு நான் ஓதிய கடைசி வசனத்தில் இறைவன் கூறுகின்றான்: முதல் இரண்டு வசனங்களில் கூறப்பட்ட நபர்களே இறைவன் பார்வையில் உண்மையான முஃமினாவார்கள். எவர் ஒருவர்

இறைவன் பார்வையில் உண்மையான முஃமினாக ஆகி விடுகின்றாரோ அவரே இறை அருளுக்கு உண்மையான வாரிசாகி விடுகின்றார். அந்த அருளைப் பற்றி கூறும் போது இறைவன் கூறுகின்றான்:

அல்லாஹ்வுக்காக அவர்களின் இறைவனிடத்தில் பதவிகள் இருக்கின்றன. மன்னிப்பும், கண்ணியத்திற்குரிய உணவும் உள்ளன. இவ்வுணவானது இவ்வுலகத்தையும், மறுமையையும் சார்ந்ததாக இருக்கும். ஆக, ஈமானில் முன்னேற்றம், நேர்வழியில் முன்னேற்றம் இவ்விரண்டும் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக்குகின்றது. மேலும் ஓர் முஃமினின் வேலை என்னவென்றால் ஈமான் மற்றும் நேர்வழியில் முன்னேறுவதற்காக அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்கான முயற்சியில் எல்லா நேரமும் விழித்திருக்க வேண்டும். இதுதான் உண்மையான இறையச்சமும், இதையே உண்மையான இறைதிருப்தியை அடையக் கூடியவர் பெறுகின்றார். இறையச்சம் மூலமே இறை திருப்தியைப் பெறுவதன் வழியில் பாதங்கள் முன்னேறும். இறைதிருப்தியைப் பெறுவதன் மூலம் இறையச்சத்தில் முன்னேற்றம் கிடைக்கும். இறைவன் ஓரிடத்தில் கூறுகின்றான்:

**நேர்வழியினைப் பின்பற்றுபவர்களை அவன் அந்த நேர்வழியில் மேன்மேலும் முன்னேறச் செய்கின்றான். மேலும் அவர்களுக்கு அவர்களின் (தகுதிக்கேற்றவாறு) இறையச்சத்தை வழங்குகிறான். (47:18)**

அதாவது அவர்களுக்கு தக்வாவை வழங்கினான். அவர்கள் இறை திருப்தியின் தரத்துடன் தக்வாவிலும் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்வர். எவர் ஒருவர் இறை திருப்தியைப் பெற்றவாறு அவன் பக்கம் செல்கின்றாரோ அவர்களுக்கு புதிய புதிய வழியினை இறைவன் திறந்து தருகின்றான். இதனை அடைவதால் அவர்களின் தக்வாவின் தரம் உயர்ந்து கொண்டே செல்கின்றது. இவ்வாறான முஃமின்களை அல்லாஹ் தனது திருப்தி மற்றும் அருள்களின் போர்வையின் மூலம் அவர்களை போர்த்திக் கொண்டே செல்வான். முன்பை விட அதிகமாக அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வார்கள். அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருந்து கொண்டே செல்வார்கள. அவர்களின் தியாகம் இறைவனிடத்தில் ருபூபிய்யத்தின் பதவியை அடைந்து கொண்டே செல்லும். எதிரிகளின் மிரட்டல்கள் அவர்களை பயத்திற்குள்ளாக்குவதற்குப் பதில் இறை நெருக்கத்தில் அதிகரிக்கச் செய்வதற்கான காரணமாக அமையும். நிச்சயமாக நாம் இவ்வுலகிலும் மறுமையிலும் உம்முடன் இருக்கிறோம் என்று அல்லாஹ் கூறுகிறான். இவ்வாறான இறை நம்பிக்கைதான் மஸீஹே முஹம்மதை ஏற்றுக் கொண்டவர்களை குர்பானி செய்யத் தூண்டுகிறது. நம்முடன் இறை வாக்குறுதியானது அவர்களை விட மிக அதிகமாக இருக்கின்றது. மேலும் எவ்வித காரணத்தைக் கொண்டும் நாம் நம்மை இறைவனுக்கு நன்றி கொன்றவர்களாக நிலைப்படுத்தியதுமில்லை, அவ்வாறு நினைக்கவும் இல்லை. அவனின் வார்த்தைகளை மீறியவர்களாக இருப்பதில்லை. தவ்ஹீதை நிலைநாட்டுவதன் முயற்சியிலிருந்து விலகியதும் இல்லை. நான் கூறியது போன்று பாகிஸ்தான் மற்றும் இதர நாடுகளில் மஸீஹே முஹம்மதை ஏற்பவர்கள் பொறுமையுடன் இறை உதவியினைக் கேட்டு கொண்டிருக்கிறார்கள். மேலும் அல்லாஹ்வின் அருளால் ஈமான் மற்றும் ஈமானில் முன்னேறிக் கொண்டே செல்கிறார்கள். அல்லாஹ் இக்கூட்டத்தினரின் துஆவினை கேட்கின்றான். அவர்களின் ஈமானில் வலிமை மற்றும் ஷய்த்தானின் செயல்களைக் கண்டு அஞ்சாமல் இருத்தல் என்பது இறைவன் அவர்களின் துஆவினைக் கேட்டு அவர்களின் உள்ளத்திற்கு உறுதியை வழங்கி இருக்கின்றான் என்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது. இளைய பருவத்தில் காலடி எடுத்து வைக்கும் இளைஞர்களும் மூத்த வயதினை அடைந்த இளைஞர்களும் மற்றும் அனைத்து குத்தாம்களும் உணர்ச்சியுடனும் எவ்வித அச்சமுமின்றி எப்போதெல்லாம் ஜமாஅத் தரப்பிலிருந்து டியூட்டி போடப்படுகின்றதோ அதனை முழுமையாக ஏற்று செய்து வருகின்றார்கள். சில மூத்தவர்கள் நமக்கு இவ்வாறான இளைஞர்களைப் பார்த்து ஆச்சரியமாக இருக்கின்றது என்று எழுதுகின்றார்கள். பள்ளிவாசல்கள் குறிப்பாக அஹ்மதி பள்ளிவாசல்கள் காவல்துறையினர் அபாய இடமாக கருதியும் கூட அவ்விடத்தில் நமது குத்தாம்கள் டியூட்டி கொடுக்க செல்கின்றார்கள்.

எழுதுபவர் இவ்வாறு எழுதுகின்றார்: அதாவது ஏதாவது ஒரு குத்தாம் ஏதாவது ஒரு காரணத்தினால் வரமுடியாத பட்சத்தில் அவ்விடத்தில் இளைஞர்களின் குறைபாடு வெளிப்படாது. மாறாக அவர்களுக்குப் பதிலாக இரண்டு மூன்று குத்தாம்கள் டியூட்டி கொடுப்பார்கள். மேலும் அவர்கள் தன்னை மாற்றிவிடக் கூடாது என்று நினைக்கின்றார்கள். வீட்டிலிருந்து கிளம்பும் போது என்ன கூறிக் கொண்டு வெளியேறுவார்கள் என்றால் நாங்கள் திரும்பி வந்தால் சரி, இல்லையென்றால் இறைவன் தமது வாக்கினை எங்களுக்கு பகரமாக ஆக்குவானாக. இவர்களின் உள்ளத்தில் நிலைபெறும் இதுதான் உண்மையான ஈமானாகும். மஸீஹே முஹம்மதின் அடிமைகள் காட்டும் இவ்வாறான செயல் ஓர் ஆச்சரியத்திற்குரிய உணர்ச்சிகளாகும். இவர்களின் உணர்ச்சிகளை நிலைநிற்கச் செய்யும் அல்லாஹ் தனது அருள் மழையை இவர்கள் மீது பொழியச் செய்வானாக. ஆமீன். இன்று மஸீஹே முஹம்மதை ஏற்றுக் கொண்டுள்ள இளைஞர்கள் ஓர் ஆச்சரியமான சரித்திரத்தை படைக்கின்றார்கள். இவர்கள் தனது உறுதிமொழியை நிலைநாட்டுவதிலும் ஏகத்துவத்தை நிலைபெறச் செய்வதிலும் எவ்வகையிலும் பின்தங்கியவர்களைச் சார்ந்தவர்களாக இருப்பதில்லை. உண்மையில் இவர்கள்தான் தனது உயிர், பொருள், காலத்தினை தியாகம் செய்யக் கூடியவர்களாவார்கள். நிச்சயமாக இவர்கள் இறை திருப்தியை அடையக் கூடியவர்கள். ஆக இறையச்சத்தில் சென்றவாறு இபாதத்தின் தரத்தினை உயர்த்தியவாறு இறை திருப்தியை முன்பை விட அதிமாக பெற்றுக் கொண்டே செல்லுங்கள். இங்கு என் முன்னால், திடலில் அமர்ந்திருக்கும் இளைஞர்களும், நேரடியாக என்னை பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் இஜ்திமாவை சுதந்திரமாக நடத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்கள் தனது விருப்பத்திற்கேற்ப நிகழ்ச்சிகளை அமைத்து அதன்படி செயல்படவும் சுதந்திரம் இருக்கின்றது. இவர்களுக்கு தர்பிய்யத் நிகழ்ச்சிகள் நடத்தவும் சுதந்திரம் இருக்கின்றது. தப்லீக் நிகழ்ச்சிகள் நடத்தவும் சுதந்திரம் இருக்கின்றது. இவர்கள் தமது பொறுப்பினை புரிந்து கொள்ள வேண்டும். இந்த மூன்று நாட்களில் மட்டுமே தற்காலிகமாக தங்குமிடத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. மாறாக எப்பொழுதும் நிலைத்திருக்கக்கூடிய ஒரு மாற்றத்தினை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். தக்வாவின் தரத்தை உயர்த்துங்கள். இபாதத்தின் தரத்தையும் உயர்த்துங்கள். மேற்கத்திய நாடுகளின் அநாகரிகமானது உங்களிடம் எந்த விளைவையும் ஏற்படுத்திவிடக் கூடாது. தமது அந்த சகோதரர்களின் தியாகத்தினை எப்பொழுதும் உங்கள் முன் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் தமது ஈமானில் வலுவை ஏற்படுத்தியவாறு உண்மையான இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் கொடியினை பறக்க விடுவதற்காக பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். தனது உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக அனைத்து தியாகங்களையும் செய்கின்றார்கள். ஆகவே நீங்கள் இந்த சுதந்திரத்திற்கு நன்றி கூறியவாறு தனது இபாதத் மற்றும் தக்வாவின் தரத்தை உயர்த்துங்கள். அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எல்லா இடங்களிலும் பரப்புவதற்கு முழுமையான முறையில் தனது பங்கினை வழங்குங்கள். தப்லீகின் அனைத்து வழிகளையும் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தப்லீகினை இளைஞர்கள் சிறந்து முறையில் செய்ய முடியும். இன்றையகால இளைஞர்கள் இரு வகையில் தமது பாதுகாப்பினை வெளிப்படுத்துகின்றார்கள். ஒன்று, உள்ளத்தின் பாதுகாப்பு. இரண்டாவது வெளிப்படையான பாதுகாப்பாகும். குழுவாக செயல்பட்டு இஸ்லாத்திற்கு எதிரான செயல்பாட்டினை தடுத்து நிறுத்துங்கள். பல்வேறு இணைய தளங்களின் மூலம் அநாகரிகமாக ஆட்சேபனைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனை உண்மையைக் கொண்டு தடுக்க வேண்டும். இது சம்பந்தமாக முறைப்படி ஒரு செயல்முறையினை உருவாக்கி இவ்வாறான இணையதளங்களை உண்மையைக் கொண்டு நிரப்புங்கள். இதில் ஏதேனும் குறைபாடு இருந்தால் பெரியவர்கள், முபல்லிக் மூலம் உதவியைப் பெறுங்கள். இன்றைய உலகில் வாழும் அனைத்து காதிம்களுக்கும் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகும். அப்பொழுதுதான் ஏகத்துவத்தினை நிலைநாட்டுவதில் உண்மையான பங்கினை வகிக்க முடியும். மஸீஹே முஸ்வியின் இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட இடங்களில் தனது செயல்பாட்டினை வெளிப்படுத்தி வந்தார்கள். மஸீஹே முஹம்மதின் குத்தாம்களோ புதிய வழிமுறைகளின் மூலமாக அனைத்து உலங்களிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஆக இதன் பக்கம் சிறப்பான கவனத்தை செலுத்துங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக. ஆமீன்.

இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது ஜமாஅத் சகோதரர்களே! இறைவன் உங்களோடு இருப்பானாக! வல்லமைமிக்க அவன் ரஸூல் (ஸல்) அவர்களின் சஹாபாக்களை தயார் செய்ததைப் போன்று மறுமையை நோக்கிச் செல்லும் பயணத்தில் உங்களையும் தயார் செய்வானாக! உலகம் ஓர் அற்பமானதே என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உலகத்திற்காக மட்டும் வாழும் வாழ்க்கையானது சாபத்திற்குரியதாகும். எவரின் துக்கமும் மகிழ்ச்சியும் உலகத்தைச் சார்ந்திருக்கின்றதோ அவர் துர்பாக்கியசாலியாக இருக்கின்றார். இவ்வாறான மனிதர் எனது ஜமாஅத்தில் இருக்கின்றாரென்றால் அவர் பெயரளவிலேயே எனது ஜமாஅத்தில் தன்னை இணைத்திருக்கின்றார். ஏனென்றால் அவர் எந்தவொரு பழத்தையும் தராத காய்ந்துபோன மரத்தைப் போன்றவராவார். பாக்கியவான்களே! நீங்கள் முழு மனதுடன் இந்த போதனையின்படி செயல்படுங்கள். இதுதான் உங்களின் இரட்சிப்புக்காக எனக்கு தரப்பட்டுள்ளது. நீங்கள் இறைவனை இணை இல்லாதவனாக நினையுங்கள். அவனுடன் எதனையும் இணையாக்காதீர்கள். இறைவன் உலகப் பொருளை பயன்படுத்துவதற்காக பூமியிலும் வானங்களிலும் தடுக்கவில்லை. மாறாக எவர் ஒருவர் இறைவனை விட்டு விட்டு உலகப் பொருள்களின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றாரோ அவரைப் பார்த்து இறைவன் முந்தைய காலத்திலிருந்து இவ்வாறு கூறுகின்றான். தூய உள்ளமாக மாறாத வரை உங்களுக்கு இரட்சிப்பு கிடையாது. ஆக நீங்கள் தூய உள்ளம் கொண்டவராக மாறிவிடுங்கள். இச்சைகள், கோபத்திலிருந்து தூர விலகிவிடுங்கள். மனிதனிடம் நஃப்ஸே அம்மாராவின் பலவகையான அசுத்தங்கள் இருக்கின்றன. அதில் தற்பெருமை என்னும் அசுத்தமானது மிகப்பெரியதாக இருக்கின்றன. தற்பெருமை இல்லாமல் இருந்திருப்பின் எவரும் காஃபிராக ஆகியிருக்க முடியாது. ஆக நீங்கள் உள்ளம் சாந்தி அடைந்தவர்களாக ஆகி விடுங்கள். மக்களுக்கு சேவை செய்து வாருங்கள். ஏனென்றால் நீங்கள் அவர்களுக்கு சொர்க்கத்தை அடைவதற்காக அறிவுரைகளை கூறுகின்றீர்கள். நீங்கள் தற்காலிகமாக இருக்கும் இந்த உலகத்தில் அவர்கள் சம்பந்தமாக நல்லவற்றை நினைத்தால் தான் உங்களின் இந்த அறிவுரைகள் பயனளிக்கும். இறைக் கட்டளைகளை முழு மனதுடன் செய்து வாருங்கள். நீங்கள் இது சம்பந்தமான கேட்கப்படுவீர்கள். இறைவன் தன் பக்கம் உங்களை ஈர்ப்பதற்காகவும் உங்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்துவதற்காகவும் தொழுகையில் அதிகமாக துஆ செய்யுங்கள். ஏனென்றால் மனிதன் பலவீனமாக இருக்கின்றான். தூர விலகக் கூடிய அனைத்து தீமைகளும் இறை வல்லமையினாலேயே தூல விலகுகின்றது. எதுவரை மனிதன் இறை வல்லமையினைப் பெறுவதில்லையோ அதுவரை அவனிடமிருந்து தீமைகள் விலகுவதில்லை. வெறும் பெயரளவில் கலிமாவைப் பரப்புவது இஸ்லாம் அல்ல. மாறாக உங்களது ஆன்மா இறை சன்னதியில் முழுமையாக பணிந்து விடுவதன் பெயரே இஸ்லாம் ஆகும். இறைவன் மட்டும் அவனது கட்டளைகள் உங்களது உலகத்தில் அனைத்து வகையிலும் உங்களுக்கு முன்னுரிமை உள்ளதாக ஆகி விடட்டும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றின்படி நடப்பதற்கு நமக்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON ON 24.09.2010**

Translated by : **Maulavi R. ABDULLAH**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**